தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களும், நமது சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய தம்பி உதயநிதி அவர்களும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் உயிரிழந்த மாணவன் வீட்டிற்குச் சென்று வந்திருக்கிறார்கள். அதோடு எனக்கு கிடைத்த செய்தி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயநிதி அவர்கள் 10 இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு நிதி கொடுத்திருக்கிறார் என்பது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனை வரவேற்கின்றோம்; நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேநேரத்தில் அந்தக் குடும்பத்திற்கு அரசு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் தகுதிக்கேற்ப குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கொடுக்கப்பட்டுள்ளது என நினைக்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு . . .

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்தாகிவிட்டது; போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். ஒரு வரியில் சொல்லுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, கிட்டத்தட்ட 15 நாட்கள் ஆகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். உங்களுடைய பரிந்துரையையும் சேர்த்து அவர்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். ஒரு வரியில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.